[1979 மார்ச் 6

செம்பனார் கோவில் ஊராட்சி ஒன்றியம்

*வினா எண். 245—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செம்பனார் கோவல் ஒன்றியத்தை இரண்டாகப் பிரிக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :

இல்லை.

கூடலூர் ஊராட்சி ஒன்றியம்

*வினா எண். 246—திரு கே. உச்சி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

நீலகிரி மாவட்டம், கூடலூர் ஊராட்சி ஒன்றியத்தை கூடலூர் ஒன்றியம் என்றும் எந்தலூர் ஒன்றியம் என்றும் பிரிக்கும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து ; இல்லை.

திரு. கே. உச்சி : தலைவரவர்களே, கூடலூர் மாவட்டம் கிட்டதத்தட்ட மலைப் பகுதியாக இருப்பதனாலும் அங்கே தோட்டத் தொழிலாளர்கள் அதிகமாக இருப்பதன் காரணத்தாலும் கூடலூர் ஒன்றியத்தை கூடலூர் ஒன்றியம் என்றும் எந்தலூர் ஒன்றியம் என்றும் பிரிக்க அரசு மீண்டும் பரிசீலனை செய்யுமா என்பதைக் கேட்டுக் கொள்வதோடு உதகை ஊராட்சி ஒன்றியத்தை உதகை ஊராட்சி ஒன்றியம் என்றும் குந்தா ஊராட்சி ஒன்றியம் என்றும் இரண்டாகப் பிரிக்க ஆவன செய்யப்படுமா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, உதகை ஊராட்சி ஒன்றியத்தை உதகை என்றும் குந்தா என்றும் பிரிக்கிற செயற் குறிப்பு அரசின் ஆய்வில் இருக்கிறது ஆனால் அந்தச் செயற் குறிப்பு மாவட்ட ஆட்சித் தலைவரிடம் இருந்த ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு வரவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.